ARTICLE 05 · கட்டுரை 05 | சங்க இலக்கியமும் தமிழர் வாழ்வியலும்
Special Issue · Vol. 10, No. 03 (October 2026) · pp. 33–38

# தமிழர் இலக்கியங்களில் நீர்வள மேலாண்மை

*Water Resource Management in Tamil Literature*

**முனைவர் டே. ரூபி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப் பிரிவு)
உருமு தனலெட்சுமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620 019
***Dr. D. Rubi**, Assistant Professor, Department of Tamil (SFC), Urumu Dhanalakshmi College, Tiruchirappalli – 620 019*
**மின்னஞ்சல்:** e.sajayarajan@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

பண்டைத் தமிழர் இயற்கையோடு இயைந்த சிறந்த நீர்வள மேலாண்மைத் தொழில்நுட்பத்தைப் பெற்றிருந்தனர்; நீரை உயிர்நாடியாகப் போற்றிய மக்கள் அவர்கள். சங்க காலம் முதலே வேளாண்மையையும் அதன் அடிப்படையான நீர்வள மேலாண்மையையும் தமிழர் தம் வாழ்வியலோடு இணைத்துக் கொண்டனர். இப்பின்னணியில், பண்டைத் தமிழ் இலக்கியங்கள் வெளிப்படுத்தும் நீரியல் நுட்பங்களையும் மேலாண்மை நெறிகளையும் ஆராய்வதே இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாகும். நிலத்தின் அமைப்புக்கு ஏற்பக் கிணறு, குளம், ஏரி, கண்மாய், ஊருணி எனத் தமிழர் நீர்நிலைகளை நுட்பமாக வகைப்படுத்திய முறையையும், ஆற்று வெள்ளத்தைப் பாசனத்திற்குத் திருப்பிய கரிகால் சோழனின் கல்லணை போன்ற பொறியியல் அருஞ்சாதனைகளையும் இக்கட்டுரை விளக்குகிறது.

**திறவுச்சொற்கள்:** தமிழ் இலக்கியம்; நீர்வளம்; நீர் மேலாண்மை

### Abstract

Ancient Tamils possessed an excellent water resource management technology that was deeply harmonized with nature. They were a people who revered water as the very life force. Since the Sangam era, Tamils integrated agriculture and its foundational element water resource management into their way of life. Against this backdrop, the primary objective of this article is to analyze the hydrological techniques and management principles revealed in ancient Tamil literature. This article explores how the Tamils meticulously classified water bodies based on land topography such as wells (kinaru), ponds (kulam), lakes (eri), irrigation tanks (kammai), and drinking water tanks (ooruni) as well as engineering marvels like Karikala Cholan’s Kallanai (Grand Anicut), which diverted river floods for irrigation.

**Keywords:** Tamil Literature; Water Resource; Water Management

## முன்னுரை

“நீரின்றி அமையாது உலகு”

(குறள்-20)

என்ற திருவள்ளுவரின் கருத்து நீரின் இன்றியமையாமையை தெளிவுபடுத்துகிறது. நீர் இல்லாமல் உயிர் வாழ்வும் வேளாண்மையும் உணவு உற்பத்தியும் சமூக வளர்ச்சியும் சாத்தியமில்லை. பண்டைய தமிழர் நீரை வெறும் இயற்கை வளமாக மட்டும் கருதவில்லை அதனை சேமித்தல் பாதுகாத்தல் பகிர்ந்தளித்தல் வேளாண்மைக்கு பயன்படுத்துதல் போன்ற செயல்பாடுகளை ஒருங்கிணைத்தனர். சங்க இலக்கியங்களில் காணப்படும் நீர்நிலைகள் பற்றிய செய்திகள் தமிழரின்

சுற்றுச்சூழல் அறிவையும் நீரியல் மேலாண்மை திறமையும் வெளிப்படுத்துவது பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

## தமிழர்கள் தோற்றுவித்த நீர்நிலைகள்

நீர் ஆதாரத்திற்கு முக்கிய காரணமாக விளங்குவது மழை நீராகும் மழை நீரை பாதுகாக்க நம் முன்னோர்கள் ஏரிகள் குளங்கள் அணைகள் கிணறுகள் தடுப்பணைகள் என பலவற்றை ஏற்படுத்தினர். அவற்றில் குறிப்பிடத்தக்கவை அகழி, ஆறு, ஆழிக்கிணறு, இளஞ்சி, உரைக்கிணறு, ஊரணி, ஏரி, கண்மாய், கால்வாய், குட்டை, குளம், கூவம், கூவல், கேணி, தெப்பக்குளம், தொடுகிணறு, நடைகேணி, மதகு வாய்க்கால் என்பனவாகும்.

## குளங்கள்

தமிழகத்தின் வேளாண்மை பெருமளவில் மழையை சார்ந்தது மழைக்காலங்களில் கிடைக்கும் நீரை சேமித்து வறட்சி காலத்தில் பயன்படுத்துவதற்கு குளங்கள் பெரிதும் உதவின. இதனையே பட்டினப்பாலையில் கடலூர் உருத்திரங் கண்ணனார் குளங்களை வெட்டி நீரை தேக்கி வேளாண் உற்பத்தி பெருக்குவது மன்னனின் கடமையாகும் என்பதை,

> “காடு கொண்று நாடாக்கி
> குளம் தொட்டு வளம் பெருக்கி”
>
> (பட்டினப்பாலை 284)

கரிகாலன் காட்டை அழித்து குளம் கட்டி விளை நிலங்களை பெருக்கினார் என்பதை அறியலாம். பாரியின் பரம்பு மலை உள்ள குளத்தின் கரை எட்டாம் நாள் பிறை சந்திரனை போல வளைவாக கட்டப்பட்டிருந்தது. நீர் தேக்கங்களின் கரைகளை வளைவாக கட்டினால் நீரின் வேகத்தை கட்டுப்படுத்த முடியும் எனும் தொழில்நுட்பத்தை தமிழர்கள் அறிந்திருந்ததை,

> “எண்நாள் திங்கள் அணைய கொடுங்கரை
> தெண்ணீர்ச் சிறுகுளம்”
>
> (புறம்-118)

எனும் புறநானூறு பாடல் உணர்த்துகிறது. மழைக்காலத்தில் வெள்ள நீரை கண்மாய்க் குளங்களில் தேக்கி வைத்தனர். அந்நீரை கோடை காலத்தில் பயன்படுத்துவதற்காக குளங்களை காவல் காத்ததை,

> “பெருங்குளம் காவல் போல”
>
> (அகம்-252)

என்ற அகநானூற்று பாடல் கூறுகிறது. வேளாண் தொழிலுக்கு ஏற்ற நீர் ஆதாரங்களை உருவாக்குவதே மன்னனின் கடமை. பாண்டிய நெடுஞ்செழியனே உனது நாட்டில் குளங்களை வெட்டி நீர் ஆதாரங்களை பெருக்க வேண்டும் அவ்வாறு செய்தால் நீ என்றும் அழியாத புகழுடன் வாழ்வாய் என்று புலவர் குடபுலவியனார் கூறுவதை,

> “நிலன்நெறி மருங்கின் நீர் நிலை பெருகத்
> தட்டோர் அம்ம இவன் தட்டோரே
> தள்ளா தோர் இவன் தள்ளாதோரே”
>
> (புறம்-18)

குளத்திற்கு நீர் வருகின்ற வழி நன்கு அமையப் பெறாத குளம் வறுமையால் பிடிக்கப்படும் என்பதை,

"வாய் நன்கு அமையா குளனும்
நல்குரவு சேரப்பட்டார்"

(திரிகடுகம்-86)

என திரிகடுகம் எடுத்துரைக்கிறது. போதிய நீர் இருப்பு இல்லாத உளமற்ற குளத்து நீரை நம்பி பயிரிடப்படும் நெற்பயிர் தண்ணீர் இன்றி காய்ந்து கருகி போகும்.

"வளம்மில் குளத்தின் கீழ் நெற்சாம்"

(நான்மணிக்கடிகை - 81)

என நான்மணிக்கடிகை கூறுகிறது.

## கிணறுகள்

பழங்காலத்தில் செயற்கையாக தோன்றும் கிணறுகள் மிக அரிதாகவே இருந்தன 'இவ் ஊரில் கிணறு பெற்ற மனை' 'கிணறு பெற்ற தோட்டம்' என கல்வெட்டுக் குறிப்பு இதன் சிறப்பையும் அருமையையும் உணர்த்தும். கூடலூர் காஞ்சிக் கூவல் கொல்லன் கூவல் என்ற ஊர் பெயர்கள் அங்குள்ள கிணறுகளால் பெயர் பெற்றனர். ஊர் மக்கள் பயன்படுத்தும் நீர் நிலை ஊரணி எனப்படும். திவாகர நிகண்டு கிணற்றை கூவல், அசும்பு ,கூபம், குழி பூவல், கேணி, துறவு போன்ற பெயர்களில் குறிப்பிடுகிறது. சீவக சிந்தாமணி மணர்ப்பாங்கான இடங்களில் கிணறு அமைத்ததை

"வெண்மலர் கிணறு"

(குணமாலை-1082)

என்று குறிப்பிடுகிறது. விவசாயத்திற்கு மட்டுமல்லாமல் குடிநீர் தேவைக்காக கூவல் எனும் கிணறுகள் தோண்டப்பட்டன இவ்வகை நீர் நிலைகளை உருவாக்குபவர்கள் இறந்தாலும் இரவாத புகழ் அடைவார் என்பதை, திரிகடுகம் பாடல் கூறுகிறது.

"கூவல் குறைவின்றி தொட்டானும் இம்மூவர்
சாவா உடம்பெய்தி னார்"

(திரிகடுகம்-16)

கூவல் என்பது ஒரு சிறு கிணறு அல்லது குட்டை, கலங்கள் நீர் உடையது. இக்கூவல் பாலை நிலங்கள் இருப்பதை சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. காட்டில் மாடு மேய்க்கும் ஆயர்கள் கணிச்சி என்னும் குந்தாலியால் குழி தோண்டினர். இதனால் வெறும் தண்ணீரை தாகத்தால் அலையும் யானைகள் குடித்ததை நற்றிணை பாடல் கூறுகிறது.

"வெயில் வெய்துற்ற பலர் அவல் ஒதுக்கல்
கணிச்சியில் குவித்த கூவல் பண்ணி
ஆண்வழிபடுநர் தோண்டிய பந்தல்
யானை இனநிரை வெளவும் கானம்"

(நற்றிணை-240)

## ஏரிகள்

ஏரி என்பது மழைநீரையும் ஆற்று நீரையும் தேக்கி வைத்து வேளாண்மை குடிநீர் மற்றும் பிற தேவைகளுக்கு பயன்படுத்தப்பட்ட முக்கியமான நீர் நிலையாகும். காவிரிப்பூம்பட்டினத்தின் நீர்வள சிறப்பை காட்டும் பகுதியில்

"வரி அணி சுடர் வான் பொய்கை
இரு காமத்து இணை ஏரி"

(பட்டினப்பாலை 32-39)

என்ற பாடலால் அறியலாம்.

முதலாம் மகேந்திரவர்ம பல்லவன் வடஆர்க்காடு மாவட்டம் வாலாசாபேட்டைக்கு அருகில் மகேந்திர வாடி என்னும் ஏரியை உருவாக்கினான். மாமண்டூரில் சித்திரப்மேகத் தடாகம் எனும் ஏரியை உருவாக்கி நீர் பாசனத்தை ஏற்படுத்தினான். சோழவாரிசி, வீரநாராயணன் ஏரி ஆகியவைகளை முதல் பராந்தகன் வெட்டினான். வீரநாராயண ஏரி வீராணம் எனப்படுகிறது. அவன் மகள் குந்தவையார் குந்தவைப் பேரேரியும் உருவாக்கினர். முதலாம் ராஜராஜன் கங்கை வெற்றியின் நினைவாக கங்கைகொண்ட சோழபுரத்தில் சோழ கங்கம் எனும் ஏரியை வெட்டி நீர் ஆதாரத்தை பெருக்கினான். சோழர் காலத்தில் ஏரி வாரியம் எனும் ஒரு அமைப்பு இருந்து நீர் மேலாண்மை பணிகள் சிறப்பு பெற்றிருந்தன. 2000 ஆண்டுகளுக்கு முந்திய சங்க காலத்தில் இறந்தவர்களை முதுமக்கள் தாழிகள் புதைத்து வந்தனர் அவைகளில் பல ஏரி குளம் போன்ற நீர்நிலைகளுக்கு அருகிலே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

## ஏரிகளில் கலிங்கின் பங்கு

தொடர் ஏரிகளில் அமைக்கப்பட்டுள்ள கலிங்குகள் மிகச் சிறந்த மேலாண்மையும் நீர் பங்கிட்டையும் உறுதி செய்கின்றனர். பொதுவாக ஏரிகளில் கலிங்கிகளின் பங்கு மிக முக்கியமானதாகும் ஏரிகளில் நீர் நிரம்பியவுடன் அதிக நீர் கலிங்குகளின் மூலமே வெளியேறுகிறது வெள்ள காலங்களில் வெள்ள நீர் வெளியேறும் அளவு கலிங்கின் வடிவமைப்பு இருக்க வேண்டும்.

## ஏரிகளின் மண்கரைகள்

ஏரிகளின் மண் கறைகள் அமைக்கப்படும் பொழுது அரைமண் கொண்டு கட்டப்பட்டதாக சங்க இலக்கியம் தெரிவிக்கிறது. அந்தந்த பகுதியில் இருக்கும் மண்ணோடு இருக்கும் சில பொருட்கள் சேர்த்து அதன் மூலம் ஏரிக்கரைகள் அமைக்கப்பட்டுள்ளன. சர்.ஆர்தர் காட்டன் அவர்கள் ஏரிக்கரைகளை ஈரமான களிமண்ணை கொண்டு அமைப்பது அவசியம் என்று ஆங்கில பொறியாளரின் கருத்துக்கு மாறாக பழந்தமிழர்கள் அந்தந்த பகுதி மண்ணைக் கொண்டே ஏரிக்கரையை நன்முறையில் அமைத்துள்ளனர் என் பாராட்டுகிறார்.

## மதகுகளும் ஏரிகளும்

. ஏரிகளில் இருந்து பாசனத்துக்கு நீரை வெளியேற்ற அன்றே சிறந்த முறையில் மதகுகள் வடிவமைக்கப்பட்டிருந்தன. மதகுகளுக்கு பல பெயர்கள் இருந்தன சுருங்கை, புதவு, மதகு, குமிழி, தூம்பு, புலி கண்மடை முதலியன. தற்கால திருகு அடைப்பான் போன்று நீர் வெளியேறும் அளவை சிறுக சிறுக குறைக்கவோ, அதிகரிக்கவோ கூடிய மதகுகள் அன்றே இருந்தன.

## அணைக்கட்டு

> “வருவிசை புனலைக் கற்சிலை போல
> ஒருவன் தாங்கிய பெருமையானும்”

(தொல்.பொருள்-65 )

விசையோடு வரும் நீரை ஒரு கற்சிலை தடுத்து நிறுத்துவது போல் வேகமாக முன்னேறி வரும் படையை உறுதியோடு முதலாவதாக முன் சென்று தடுக்கும் ஒரு வீரன் பெருமை அடைகிறான் என்பது இதன் பொருள். கிமு ஐந்தாம் நூற்றாண்டை சேர்ந்த தொல்காப்பியர் பாடிய வரிகள் இவை. இவர் குறிப்பிடும் கற்சிலை என்பது ஒரு

அணைக்கட்டு ஆகும். பழந்தமிழர் ஆற்றில் வரும் நீரை கற்களால் ஆன கட்டுமானத்தைக் கொண்டு சிறைப்படுத்தி பாசனத்துக்கு பயன்படுத்தினர் என்பதை இப்பாடல் தெரிவிக்கிறது.

## கல்லணை ஒரு கற்சிலை

. கரிகாலன் காவிரிக்கு குறுக்கே அணை கட்டவில்லை அவன் காவிரிக்கு கல்லாலான கரையை அமைத்தான் என்பதே உண்மையாகும். கல்லணை கட்டியவன் இரண்டாம் கரிகாலன் ஆவான் இவன் கிமு இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தவன் ஆகவே கல்லணை கட்டப்பட்டு 2100 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது.

கிபி ஏழாம் நூற்றாண்டை சார்ந்த புண்ணியகுமாரன் என்ற இரேனாட்டு சோழனது மலேபாடு செப்பேடு கரிகாலன் காவிரிக்கு கரையை அமைத்தான் என்பதை தெரிவிக்கின்றது. இலங்கை நூல் ஒன்று இலங்கை மக்களை சோழன் ஒருவன் அணைக்கட்ட சிறைபிடித்து சென்றான் என்றும் அதற்கு பழிவாங்க கிபி இரண்டாம் நூற்றாண்டில் இலங்கை ஆண்ட கயவாக தமிழகத்திற்கு படையெடுத்துச் சென்று தமிழர்களை சிறை பிடித்து வந்தான் என்றும் தெரிவிக்கிறது இந்த இரண்டு செய்திகளும் கி.பி இரண்டாம் நூற்றாண்டுக்கு முன்பு வாழ்ந்த சோழன் கரிகாலன் காவிரிக்கு கரை அமைத்தான் என்பதை உறுதிப்படுத்துகின்றன.

## நீர்நிலை பாதுகாப்பும் பராமரிப்பும்

தமிழர்கள் நீர் நிலைகளை உருவாக்குவதில் மட்டுமின்றி அதனை நன்கு பாதுகாப்பதிலும் சிறந்து விளங்கினர். நக்கண்ணையார் என்ற சங்க புலவர்

“துய்அவிழ் பனிமலர் உதிர் வீசித்
தொழின்மழை பொழிந்த பானாட்கங்குல்
எறிதரை திவலை தூவும் சிறுகோட்டு
பெருங்குளம் காவலன் போல”

அருங்கடி அன்னையும் துயில் மறந்தனளே”

(அகம் 252)

எனக் கூறுகிறார். கடுமையான மழை பொழிந்து கொண்டிருக்கும் நடு இரவினில் கூட தூங்காமல் பெரிய குளம் ஒன்று உடையாமல் பாதுகாத்துக் கொண்டிருக்கும் அதன் காவலன் போல் என்னை அன்னை பாதுகாத்து வருகிறாள் என தலைவி தனது இக்கட்டான நிலை குறித்து தோழி மூலம் தலைவனிடம் சொல்லுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. ஆகவே கடுமழையில் நடு இரவிலும் தூங்காமல் குளத்தை பாதுகாப்பது அவசியமானது. ஏரிகளின் கரைகள் கலிங்கு மதகுகள் போன்றவற்றை பராமரிப்பதும் பாதுகாப்பதும் ஏரி நீரை பாசனத்திற்கு பிரித்து அனுப்புவதும் பணிகளை செய்ய முறையான அமைப்பு ஒன்று இருந்துள்ளது.

மாமன்னன் ராஜராஜன் காலத்தில் அமைக்கப்பட்ட குமிழித்தூம்பில் மன்னனின் கல்வெட்டுகள் இடம் பெற்றிருந்தன. அதனால் அது அரசின் சொத்து சேதப்படுத்துபவர்கள் அரசின் தண்டனைக்கு ஆளாவார்கள் இத்தகைய குமிழித்தூம்பை பராமரிப்பவர்களின் பாத மணலை தான் தலை மேல் கொல்வேன் என ராஜராஜன் கல்வெட்டு வாயிலாக அறிவிக்கிறான் இதனால் நீர் பாதுகாப்பு அரசின் கடமையாக விளங்கியது தெளிவாகிறது.

## முடிவுரை

இலக்கியங்கள் தமிழரின் நீரியல் அறிவையும் நீரின் பல்வேறு நிலைகளையும் பதிவு செய்துள்ள வரலாறு ஆவணங்களாக திகழ்கின்றன. இன்றைய நீர் பற்றாக்குறை சூழலில் முன்னோர் கடை பிடித்த நீர் சேமிப்பு மற்றும் நீர்நிலை பாதுகாப்பு முறைகளை மீட்டெடுத்து நடைமுறைப்படுத்துவது காலத்தின் கட்டாயமாகும்.

## துணைநூற் பட்டியல்


1. பரிமேலழகர் , திருக்குறள், சாரதா பதிப்பகம், சென்னை, முன்றாம் பதிப்பு -2011
2. மறைமலையடிகள், பட்டினபாலை ஆராய்ச்சியும் உரையும், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-1
3. புலியூர்க்கேசிகள், புறநானூறு ஜீவா பதிப்பகம் சென்னை முதற்பதிப்பு -2013
4. புலியூர்க்கேசிகன், அகநானூறு பாரி நிலையம், பிராட்வே, சென்னை-1
5. நா.மு.வேங்கடசாமி நாட்டார், திரிகடுகம், பாரி நிலையம், சென்னை பதிப்பு - 2019
6. வே.இரா.மாதவன், நான்மணிக்கடிகை, தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்
7. மு.வேங்கடராமன், நற்றிணை, உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், பெசன்ட்நகர், சென்னை.
8. ரா. சீனிவாசன், சீவகசிந்தாமணி சாரதா பதிப்பகம், சென்னை. முதற் பதிப்பு -2000
9. சா. திருஞானசம்பந்தம், தொல்காப்பியம் கதிர் பதிப்பகம், தெற்கு வீதி, திருவையாறு
10. திவாகர நிகண்டு, சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், திருநெல்வேலி


## References


1. Parimelazhagar, *Thirukkural*, Saradha Pathippagam, Chennai, Third Edition, 2013.
2. Maraimalai Adigal, *Pattinappalai Araichiyum Uraiyum* , Saiva Sidhanta Noorpthippu Kazhagam Limited, Chennai-1.
3. Puliyur Kesikan, *Purananuru*, Jeeva Pathippagam, Chennai, First Edition, 2013.
4. Puliyur Kesikan, *Agananuru*, Pari Nilayam, Broadway, Chennai-1.
5. Na. Mu. Venkatasamy Nattar, *Thirikadugam*, Pari Nilayam, Chennai, 2019 Edition.
6. Ve. Ra. Madhavan, *Naanmanikkadikai*, Tamil University, Thanjavur.
7. Mu. Venkataraman, *Narrinai*, U. V. Swaminatha Iyer Nool Nilayam, Besant Nagar, Chennai-90.
8. Ra. Srinivasan, *Seevaka Chinthamani*, Saradha Pathippagam, Chennai, First Edition, 2000.
9. Sa. Thirugnanasambandham, *Tholkappiyam*, Kathir Pathippagam, South Street, Thiruvaiyaru.
10. *Thivakara Nigandu*, Saiva Sidhanta Noorpthippu Kazhagam, Tirunelveli.